

சோழவரம் தவத்திரு நடேச சுவாமிகள் வரலாறு

சுவாமிகள் சென்னையில் இருந்து வடக்கே 24 கி.மீ. தொலைவில் உள்ள பொன்னேரி வட்டத்தைச் சார்ந்த சோழவரம் என்னும் கிராமத்தில் கி.பி. 1906ஆம் ஆண்டு ஆறுமுகம் பிள்ளை = ஜெயம்மாள் தம்பதியருக்கு ஆறாவது குழந்தையாகத் தொன்றினார்.

இவருக்கு பெற்றோர் சூட்டியப் பெயர் நடேசன் என்பதாகும், உடன் பிறப்புகள் 6 பேர் இரத்தினம்மாள், கோகிலாம்மாள், இராஜம்மாள், முனி வேல் பிள்ளை, பங்காரம்மாள் ஆகியோர் ஆவர். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்த சுவாமிகள் அதன் பின் தன்னுடைய அக்கா திருமதி. இரத்தினம்மாள் மற்றும் அவருடைய கணவர் திரு. சிங்காரம் பிள்ளை ஆவர்கள் ஆதரவில் வளர்ந்து வந்தார். அப்போழுது தன்னுடைய தொடக்கக் கல்வியை 5ஆம் வகுப்புவரை படித்து அநத் அளவிலேயே தன்னுடைய பள்ளிப்படிப்பை முடித்துக் கொண்டார்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் சுவாமிகள் வளர்ந்து வரும் சமயத்தில் திரு. சிங்காரம் பிள்ளை அமிர்தம்மாள் குடும்பத்தாருடன் தொடர்பு ஏற்பட்டது. அந்த தொடர்பு தான் சுவாமிகளின் வாழ்க்கையில் மாபெரும் திருப்புமுனையாகும்.

இந்த கால கட்டத்தில் தான் சுவாமிகள் சிங்காரம் பிள்ளை அவர்களுடன் சேர்ந்து இறைபணிகளில் ஈடுபடலானார். அப்போழுது தான் சுவாமிகளுக்கு ஸ்ரீமத் பாலசுந்தர சுவாமிகளின் தொடர்பும் ஏற்பட்டது. இந்தக் காலகட்டத்தில் தான் நடேசசுவாமிககள் சிங்காரம் பிள்ளை அவர்களுடன் இணைந்து கோயிலுக்குச் செல்வது, பஜனை செய்வது, ஸ்ரீமத் பாலசுந்தர சுவாமிகளிடம் சென்று பாடம் கேட்பது போன்ற செயல்களில் ஈடுபட்டு வந்தார்.

இந்த நேரத்தில் தான் கிருபானந்த வாரியார் அவர்கள் சிந்தாதிரிப்பேட்டையில் தினந்தோறும் இரவில் ஒவ்வொரு தெருவாகச் சென்று 'திருப்புகழ்' பாடல்களைப் பாடி ஆடிக் கொண்டு அதற்கான விளக்கமும் கூறிக்கொண்டிருந்தார். இதனை பார்க்க திரு. நடசே சுவாமிகளும் திரு. பாலசுந்தர சுவாமிகளும் சென்று விடுவார்கள். இந்த நிகழ்ச்சியைப் பற்றி சுவாமிகள் விரிவாகக் கூறியுள்ளார். ஒவ்வொரு நாளும் முழு இரவும் வாரியார் அவர்கள் திருப்புகழ் பாடல்களைப் பாடியாடிவிட்டு, விடியற்காலையில் சிங்காரம் பிள்ளை அவர்களின் வீட்டுத் திண்ணையில் வந்து படுத்துவிடுவார். பின்பு சுவாமிகளும், மற்றும் சிலரும் சேர்ந்து அருணாசல நாயக்கர் தெருவில் உள்ள விஜயராகவர் செய்டி

கோஷன் லைப்ரரியை ஏற்பாடு செய்தனர். 1928ல் ஒரு நல்ல நாளில் சொற்பொழிவு துவங்கப்பட்டது. அது நன்றாக தொடர்ந்து 6 வருட காலம் நடந்து. இதன்பின் சுவாமிகளின் உத்தரவின்படி இதற்கு ஒரு பூர்த்தி விழா செய்ய முடிவு எடுக்கப்பட்டது. இவ்வாறாக சுவாமிகள் இளமையிலேயே ஆன்மீகப் பணியில் மிருந்த ஈடுபாடு கொண்டவராக வாழ்ந்து வந்தார்.

கி.பி. 1926ல் பொன்னேரி வட்டத்தைச் சேர்ந்த செம்புலிவரம் மற்றும் சிறணியம் ஆகிய இரண்டு கிராமத்திற்கும் கணக்குப் பிள்ளையாக உத்தியோகப் பொறுப்பினை ஏற்றார். அப்போது சுவாமிகள் வயது 21. அது முதல் சுவாமிகள் 55 வருஷகாலம் இந்தப் பணியில் இருந்தார். கி.பி. 1980ல் அரசாங்க உத்திரவுப்படி இந்தப் பணி நீக்கப்பட்டது.

சுவாமிகளுக்கு கி.பி. 1976ல் குடியரசு தினத்தன்று பணியில் 50 வருஷங்கள் எந்தவித தவறுமின்றி பணியாற்றியவர்களுக்கு வழங்கப்பட்ட அரசாங்க விருது காஞ்சிபுரத்தில் வழங்கப்பட்டது.

சுவாமிகளுக்கு சென்னையைச் சேர்ந்த வைத்தியநாதப்பிள்ளை அலமேலு அம்மாள் தம்பதியரின் ஒரே மகளான கற்பகம் என்கிற கற்பகவல்லியை கி.பி. 1930ல் மணந்தார். சுவாமிகள் தினந்தோறும் காலையில் எழுந்து குளித்தவுடன், 108 முறை வேலும், மயிலும் துணை என்று கூறிவிட்டு ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் அருளிய சண்முக கவம், குமாரஸ்தவம், பகைகடிதல் மற்றும் சுவாமிகளின் பாடல்களை பாராயணம் செய்த வண்ணம் தன் வீட்டு வேலைகளை செய்வார். இவரின் ஞாபகசக்தியை கண்டு பியக்காதவர் இல்லை. எந்ததனை வருஷத்திற்குமுன் நடந்த விஷயமாக இருந்தாலும் நாள், கிழமை, நேரம் உட்பட அனைத்தையும் துல்லியமாகக் கூறுவார். இவருக்கு 3 மகன்கள் 2 மகள்களாக 5 குழந்தைச் செல்வங்கள் கிடைத்தன. இவர்களுக்குச் செய்ய வேண்டிய அனைத்தையும் காலம் தவறாமல் செவ்வனே செய்து முடித்தார்கள்.

சோழியப்பாளைத்தின் ஆரம்ப எல்லையிலேயே ஒரு தனி இடம் இதற்காக வாங்கி 31.12.1982 மற்றும் 1.1.1983 ஆகிய இரு தினங்களும் திருத்தணி பூஜையைப் போன்றே வீட்டில் கலசங்கள் வைத்து தணிகைப் பெருமானை ஆவாஹனம் செய்து அகண்ட தீபம் ஏற்றி நிவேதித்து 1.1.1983 அன்று திருப்போரூர் ஸ்ரீமத் சிதம்பர சிவஞான சுவாமிகள் வந்து முன்னின்று கலசங்களை வீட்டிலிருந்து மேளதாளத்துடன் எடுத்து வந்து இந்த இடத்தில் பிரதிஷ்டை செய்துள்ள வேலுக்கு பஞ்சாமிர்தவண்ணம் அபிஷேகம் செய்து கலச நீரை வேலுக்கு பிரோஷித்து பூஜை செய்து முடித்தார்கள். அது முதல் சுவாமிகள் அங்கேயே தங்கி வரலரானார்.

சுவாமிகளுக்கு உடல்நிலை சரியில்லாமல் போகவே அவரை மருத்துவ மனையில் சேர்த்து சிகிச்சை அளித்தனர். இந்த சமயத்தில் சுவாமிகளின் சிரசில் ஜடை, வளர ஆரம்பித்தது. நடேச சுவாமிகளின் இறைபணியை பறைசாற்றும் வகையில் அமைந்த ஒரு மாபெரும் நிகழ்ச்சி பழநி தண்டாயுதபாணி சுவாமிகள் வந்து குடி கொண்டாகும். 1985=6ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6ஆம் தேதி சனிக்கிழழமயன்று ஒருவார் ஒரு இறைவன் திருவுருச்சிலையைக் கொண்டு வந்து சுவாமிகளின்டம் கொடுத்து இந்த சிலை தனக்கு கிடைத்ததாகவும் இது குறித்த விவரம் தெரிவிக்குமாறும் கூறினார்.

இதனை கண்ணுற்ற சுவாமிகள் சிலையை தூய்மை செய்து பார்த்தபோது இது பழநி முருகன் திருவுருவச் சிலை எனத் தெரிய வந்தது. உடனே அதனைக் கொண்டுவந்தவர் அப்படியானால் அது இங்கேயே இருக்கட்டும் எனக்கூறிச் சென்றுவிட்டார். சுவாமிகள் அந்த திருவுருவச் சிலையை 07.09.1986 முதல் அவருடைய ஆசரமத்திலே பிரதிஷ்டை செய்து நித்திய பூஜை செய்து வரலானார். அன்றைய தினம் விநாயகர் சதுர்த்தியாகும்.

சுவாமிகளின் துணைவியார் இறைவனடி சேர்ந்த போது வேண்டிய தேவைகளைச் சேவையாகச் செய்த காவல் துறை அதிகாரி திரு. நல்ல கோவிந்தசாமி அவர்களின் உதவி பெரிதும் போற்றத்தக்கதாகும்.

இந்த நிலையில் சுவாமிகளின் உடல்நிலை சற்று பாதிப்படைந்தது. சுவாமிகளுக்காக இறைவன் செய்த மாபெரும் கருணைகளில் ஒன்று டாக்டர் சி.எஸ். விஸ்வநாதன் அவர்களின் அறிமுகம் ஆகும். இவர் குறைந்தது இரண்டு வருட காலம் சுவாமிகளை பிரதி தினமும் இரண்டு முறை பரிசோதித்து தேவையான மருந்து வகைகளை தானே வழங்கி அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதனையும் குறித்துக் கொடுத்து என்ன உணவு எப்படி வழங்க வேண்டும் என்பதையும் தெரிவித்து செல்வார்கள்.

சுவாமிகளின் வேண்டுகோளுக்கு இணங்க பாம்பன் சுவாமிகள் பக்தர்களால் தொடரப்பட்ட இரண்டாவது சனிக் கிழமை வழிபாடாகும். இந்த பூஜையில் சுவாமிகள் கலந்து சிறப்பிக்க வேண்டும் என்பதற்காக அன்பர்கள் செய்த ஏற்பாடுகள் போற்றத்தக்கதாகும்.

இதில் சுவாமிகள் கலந்து கொள்ள ஒவ்வொரு இரண்டாவது சனிக்கிழமையும் 'பாலுஜூவெல்லர்ஸ்' திருவாளர் பாலு அய்யப்பன் அவர்கள் தனது காரை அனுப்பி வைப்பார்கள். அதில் சுவாமிகள் சோழவரத்திலிருந்து புறப்பட்டுச் சென்று திருவான்மியூரில் பூஜையில் கலந்து கொண்டு இரவு அன்பர்களுடன் திருவாளர் பாலு அய்யப்பன் அவர்கள் வீட்டிற்குச் சென்று விடுவார்கள். இரவு சுமார் 12 மணிவரை பேசிவிட்டு படுத்து விடுவார்கள். காலையில் சுமார் 4 மணி அளவில் எழுந்து சுவாமிகள் செய்யும் வழக்கமான இரண்டாவது சனிக்கிழமை வழிபாட்டினை அங்க முடித்துக் கொண்டு காலை உணவும் அங்கேயே சாப்பிட்டு சுமார் காலை 10 மணியளவில் சோழவரம் வந்து விடுவார்கள். இதற்காக அன்பர்களும் மறும் திருவாளர் பாலு அய்யப்பன் குடும்பத்தாரும் செய்த பணிகள் வார்த்தையில் அடங்காதவை.

மன்ற இடத்தில் 7.1.2000 அன்று பாம்பன் சுவாமிகளால் பெரிதும் போற்றப்பட்ட 'மயூர வாகன சேவன' விழா 'சத்குரு' வி. முத்துகுமாரகுரு சுவாமி அவர்களால் நடத்தப்பட இருந்தால் மன்ற இடம் முழுவதும் நன்றாக தூய்மை செய்யப்பட்டது. மேற்கண்ட அனைத்துப் பாடல்களும் ஓதி முடித்து ஆறுமுகம் சிறிது விபூதி எடுத்து சுவாமிகள் சிரசில் வைக்க சுவாமிகள் உயிர் மூச்சு..................................... அப்போது மணி காலை 8.30 இருக்கும். சுவாமிகளை அந்த மயூரநாதன் 2000-மாவது ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் தேதி வெள்ளிக்கிழமை (மார்கழி 25) 'மயூர வாகன சேவன' விழாவான அன்றே ஆட்கொண்டு அருளினார். மன்றத்தின் அருகிலேயே அவருடைய சமாதி வைக்கப்பட்டது.

தவத்திரு சோஷவரம் நடசே சுவாமிகளின் ஆன்மீகப் பணிகள்:-

1. பிள்ளையார் பூஜை
2. இரண்டாவது சனிக்கிழமை வழிபாடு
3. திருத்தணியில் ஜனவரி பூஜை
4. பங்குனி உத்திர விழா திருப்போரூர்
5. ஆடிப்பூர விழா திருக்கடவூர்
6. ஆனித் திருமஞ்சனம் ஞாயிறு கிராமம்
7. பழநி பாதயாத்திரை சென்னை - பழநி
8. கந்த ஷஷ்டி பூஜை
9. திருவொற்றியூரில் நடைபெறும் அப்பர் சுவாமிகள் நட்சத்திரம் மகிழடி சேவை ஆறாம் பவனி கடலாட்டு விழா
10. மயிலாப்பூரில் நடைபெறும் அறுபத்து மூவர் திருவிழா ஆகும்.

சிவப் பெருமானின் பெருங்கருணையினால் சுவாமிகளின் தொடர்பு அடியேனுக்கு 1984ல் சத்குரு வி. முத்துக்குமார சுவாமிகளின் மூலம் ஏற்ப்பட்டது. சுவாமிகள் நடத்தும் பூஜைகளில் அடியேன் கலந்துக் கொள்ள திருவருளும் துணைப்புரிந்தது. திருவருள் துணைப்புரிந்ததால் செல்வி வி. மரகதவல்லி என்ற மங்கையுடன் 27.5.1988ஆம் ஆண்டு சுவாமிகள் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் பாடல் பாட என்னுடைய திருமணம் நடந்தேரியது. சோஷவரம் தவத் திரு நடசே சுவாமிகள் அடியேன் எழுதிய ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி பாடலுக்கு அங்கிகாரம் கொடுத்து என்னை ஊக்குவித்தி கண் கண்ட குருவும் தெய்வமும் ஆவர்.